## வாக்காளர் பட்டியலில்

# பெயர் நீக்கம் செய்யப்பட்டால் குடியுரிமை பறிபோனதாக அர்த்தம் கிடையாது!

## உச்ச நீதிமன்றம் திட்டவட்டம்!

புதுடெல்லி, ஜூலை 21 -

நாடு முழுவதும் வாக்காளர் தீவிர திருத்த பட்டியல் பணிகள் மூன்றாம் கட்டமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்காளர்கள் பெரிய அளவில் நீக்கப்பட்டு வருகின்றனர், தேர்தல் கமிஷனின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கிட்டத்தட்ட 33 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர்.

எஸ்.ஐ.ஆர். பணியின் போது சந்தேக வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன. அவர்களுக்கு அரசின் சமூகநலத்திட்ட பலன்கள் மறுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து எழுந்து வருகிறது.

இதுபோன்ற நிலையில் மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையின் போது, லட்சக்கணக்கான மக்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. அவ்வாறு பெயர் நீக்கப்பட்டவர்களுக்குப் பொது விநியோகத் திட்டம், 'அன்ன பூர்ணா யோஜனா' போன்ற சமூகநல திட்டங்களின் பலன்கள் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் மறுக்கப்படுவதாகக் கூறி, பிரசென்ஜித் போஸ் என்பவர் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதையடுத்து மேற்கண்ட மனுவானது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்ஷி மற்றும் வி.மோகனா ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கர் நாராயணன், மேற்கு வங்கத்தில் மட்டும் சுமார் 34 லட்சம் மேல்முறையீட்டு மனுக்கள் சிறப்பு தீர்ப்பாயங்களில் நிலுவையில் உள்ளன. இதுவரை வெறும் 38ஆயிரம் மனுக்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், விசாரிக்கப்பட்ட மனுக்களில் 70 சதவீதம் பேரின் பெயர்கள் தவறாக நீக்கப்பட்டது தெரியவந்து, அவை மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, முறையான விசாரணை முடியும் முன்பே ஏழை எளிய மக்களின் ரேஷன் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைப் பறிப்பது சட்ட விரோதமானது ஆகும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து வாதங்களை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், 'வாக்காளர் பட்டியலை சரிபார்க்கவும், சந்தேகத்திற்குரிய நபர்களின் பெயர்களை நீக்கவும் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால், ஒரு நபர் இந்தியக் குடிமகனா இல்லையா என்பதை இறுதி செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு கிடையாது.

குடியுரிமை சட்டத்தின்படி அதனைத் தீர்மானிக் கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது. வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட உடனே ஒருவரது குடியுரிமை தானாகவே கண்டிப்பாக ரத்தாகி விடாது. தேர்தல் ஆணையம் ஒருவரது குடியுரிமை குறித்து சந்தேகம் கொண்டால், அந்த விவகாரத்தை உரிய விசாரணைக்காக ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்குத்தான் பரிந்துரைக்க வேண்டும்.

எனவே ஒன்றிய அரசு இந்த விவகாரத்தில் இறுதி முடிவை அறிவிக்கும் வரையில், வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட நபர்களுக்கான சமூக நலத்திட்ட உதவிகளையும், இதர சிவில் உரிமைகளையும் மாநில அரசுகள் நிறுத்த கூடாது என்று திட்டவட்டமாக தெரிவித்த நீதிபதிகள், இந்த விவகாரம் தொடர்பாக பதிலளிக்குமாறு இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கும்.

மேற்குவங்க அரசுக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை ஆகஸ்ட் 25ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## பொதுமக்கள் கொடுக்கும்

# கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேச்சு!

திருக்கோவிலூர், ஜூலை 21 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற திருக்கோவிலூர் வட்டத்திற்கான 1435 ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா மற்றும் கிராமக் குடிகள் மாநாடு நிகழ்ச்சி வருவாய்த் தீர்வாய அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.இ.பத்மஜா தலைமையில் 17.07.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியானது ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வசந்தம் க.கார்த்திகேயன் எம் எல்ஏ பேசியதாவது,

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 7 வருவாய் வட்டங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 1435 ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி 12.06.2026 அன்று தொடங்கி 29.06.2026 வரை அரசு விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களைத் தவிர்த்து ஏனைய நாட்களில் சம்பந்தப்பட்ட வட்டங்களுக்கான வருவாய்த் தீர்வாய அலுவலர்களால் நடைபெற்று உள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் திருக்கோவிலூர் வட்டத்தில் 1435ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா மற்றும் கிராமக் குடிகள் மாநாடு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுமக்களிடமிருந்து பட்டா மாற்றம், கணக்கு திருத்தம், வீட்டு மனை பட்டா, சாதிச் சான்று, வாரிசு சான்று, ஆக்கிரமிப்பு அகற்றக் கோரியது, முதியோர் ஓய்வூதியம், மகளிர் உரிமைத் தொகை, பொதுவிநியோகத் திட்டம், நில ஒப்படை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 1,048 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 460 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள 588 மனுக்கள் நிலுவையில் உள்ளது.

மீதமுள்ள மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், தீர்வு காணபடாத மனுக்களை ஆராய்ந்து அதற்குண்டான காரணத்தை மனு கொடுத்தவர்களுக்கு உரிய முறையில் தகவல் தெரிவிக்க வேண்டும், மேலும் ஆன்லைன் மூலம் பட்டாக்கள் கொடுக்கும்போது அதனை ஆராய்ந்து தகுதியான நபர்களுக்கு அந்த பட்டா வழங்க வேண்டும், இதில் முறைகேடு ஏதாவது நடைபெற்று அதில் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் யாராவது தவறு செய்து இருந்ததை கண்டுபிடிக்கப்பட்டால், துறை ரீதியாக தவறு செய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும், பொதுமக்கள் கொடுக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி னார்.

மேலும் இன்றையதினம் இலவச வீட்டு மனைப் பட்டா, முழுப் புல பட்டா மாற்றம், வட்ட வழங்கல் பிரிவு, வேளாண்மைத் துறை, சமூக பாதுகாப்புத் திட்டம், உட்பிரிவு பட்டா மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு மனு அளித்த 387 பயனாளிகளுக்கு ரூ.14,98,180/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு உறுதுணையாக இருந்த வருவாய் துறை அலுவலர்களுக்கு இந்த நேரத்தில் பாராட்டும், நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

இந்நிகழ்வில் திருக்கோவிலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சு.பழனிச்சாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், துணைத் தலைவர் தங்கம், வருவாய் வட்டாட்சியர் ச.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற திருக்கோவிலூர் வட்டத்திற்கான 1435ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா மற்றும் கிராமக் குடிகள் மாநாடு நிகழ்ச்சியில் வருவாய்த் தீர்வாய அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.இ.பத்மஜா, ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் திருக்கோவிலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சு.பழனிசாமி ஆகியோர் (17.07.2026) வெள்ளிக்கிழமை அன்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், துணைத் தலைவர் தங்கம், வருவாய் வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி BLA–2 ஆலோசனைக்கூட்டம் சென்னை, பாரிமுனை, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் துறைமுகம் கிழக்கு – மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, தமிழன் பிரசன்னா, கே.எஸ்.ரவிச்சந்திரன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, ஜனார்த்தனன், ரஞ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதீப் குமார், வட்டக் கழக செயலாளர்கள் ஆ.நா.பார்த்திபன், கே.கவியரசு, எல்.சத்யநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க.முருகன், விஜயகுமார், ஆர்.பி.ரமேஷ், பி.செந்தில் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள், BLA–2 க்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பயணிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை எற்படுத்தியுள்ள

# படுக்கை வசதி 'வந்தே பாரத்' ரயில் உற்பத்தி மேலும் தாமதம்!

## ஜெர்மனி நிறுவனத்தின் ஒப்புதல் கிடைக்காததால் பின்னடைவு!

சென்னை, ஜூலை 21 -

படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் உற்பத்தி மேலும் தாமதமாகியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள ரயில் பயணிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படுக்கை வசதி கொண்ட அதிநவீன வந்தே பாரத் ரயில்களின் உற்பத்திப் பணிகள் மேலும் கால தாமதமாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ரயில்களுக்கான வடிவமைப்பு ஒப்புதலை வழங்குவதில் ஏற்பட்டுள்ள சர்வதேச சிக்கல்களே இந்த தாமதத்திற்கு முதன்மை காரணமாகக் கூறப்படுகிறது.

இந்திய ரயில்வே துறை, தொலைதூர பயணங்களை மிகவும் எளிதாகவும், வேகமாகவும், சொகுசானதாகவும் மாற்றும் நோக்கில் அதிநவீன படுக்கை வசதி கொண்ட 200 வந்தே பாரத் ரயில்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக 120 ரயில்களை உற்பத்தி செய்வதற்காக, ரஷ்யாவைச் சேர்ந்த நிறுவனத்துடன் இணைந்து 'கிட் ரயில்வே சொல்யூஷன்ஸ்' (Kinet Railway Solutions) என்ற கூட்டு நிறுவனம் தொடங்கப்பட்டது.

இதற்கான பிரமாண்ட ஒப்பந்தமும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, ஆரம்பகட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. நிச்சயிக்கப்பட்ட உற்பத்தி மையங்களில் இதற்கான படுக்கை வசதி கொண்ட ரயில் பெட்டிகளை தயாரிப்பதற்கான முதற்கட்டப் பணிகள் தடையின்றி தொடங்கவிருந்த நிலையில், தற்போது இந்த திட்டத்திற்கு எதிர்பாராத சர்வதேசப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

வந்தே பாரத் ரயில்களுக்கான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு சர்வதேச ஆலோசனை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், ரயில் பெட்டி வடிவமைப்புக்கான இறுதி ஒப்புதலை வழங்குவதில் அந்த ஜெர்மனி நிறுவனம் தொடர்ந்து தாமதம் செய்து வருகிறது.

தொழில்நுட்பக் காரணங்களால் இந்த இறுதி வடிவமைப்பு ஒப்புதல் இதுவரை கிடைக்கப் பெறாததால், இந்திய ரயில்வேயும், ரஷ்ய கூட்டு நிறுவனமும் திட்டமிட்டபடி தங்களின் உற்பத்திப் பணிகளை தொடங்க முடியாத ஒரு முட்டுக் கட்டை சூழல் உருவாகியுள்ளது.

தனியார் மற்றும் சர்வதேச கூட்டு நிறுவனங்களின் பங்களிப்போடு மிகக் கடுமையான காலக்கெடுவுக்குள் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், சர்வதேச ஆலோசனை நிறுவனத்தின் இந்த தாமதம் காரணமாக, படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்கள் தண்டவாளத்தில் இறங்கி வணிகரீதியான சேவையைத் தொடங்குவது மேலும் சில மாதங்களுக்கு தள்ளிப் போகும் என்று ரயில்வே உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் சொகுசுப் பயணத்தை எதிர்பார்க்கும் பொதுமக்களின் காத்திருப்பும் நீண்டுள்ளது.

## பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள்

# 15 நாளுக்குள் உரிமை கோராவிட்டால் ஏலம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, ஜூலை 21-

பறிமுதல் செய்யப்பட்ட, கேட்பாரற்ற வாகனங்களின் உரிமையாளர்கள் 15 நாட்களுக்குள் உரிமை கோராவிட்டால் ஏலம் விடப்படும் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

சென்னை பெருநகர காவல், மயிலாப்பூர், கொளத்தூர், புளியந்தோப்பு, வண்ணாரப்போட்டை மற்றும் கோயம்பேடு காவல் நிலையப் பகுதிகளில் சாலையோரங்களில் நீண்ட நாட்களாக கேட்பாரற்று போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்திவைக்கப் பட்டிருந்த மொத்தம் 1863 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான வாகனங்களை அப்புறப்படுத்தி, அந்தந்த காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களின் விவரங்கள் சென்னை மாநகராட்சி இணையதளமான www.chennaicorporation.gov.inல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வாகனங்களை உரிமை கோருவோர் சம்பந்தப்பட்ட காவல் நிலையமான சென்னை மயிலாப்பூர், கொளத்தூர், புளியந்தோப்பு, வண்ணாரப்போட்டை மற்றும் கோயம்பேடு காவல் நிலையங்களை செய்தி வெளியான 15 நாட்களுக்குள் அணுக வேண்டும். அவ்வாறு உரிமை கோரப்படாத வாகனங்களை மின்னணு ஏலம் மூலம் கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் மூத்த முன்னோடி கழக ஆர் நாராயணன் அவர்களின் திருவுருவப்படத்தை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் திறந்து வைத்து மலர்அஞ்சலி செலுத்தினார் உடன் இரா .கிரிராஜன் எம்.பி., புத்தகரம் ஏழுமலை. வட்டச் செயலாளர் டி சுந்தரம் .எம் சரவணன். இ ராமன் .எஸ்பி கண்ணன். சக்கரபாணி. பரமேஸ்வரி, ஹாப்பி இப் ரஹ்மான்,கே. நரேந்திரன், எஸ். என் .கோதண்டன்,எஸ் என் ராஜி, எம். சீனிவாசன், எம் ஸ்ரீதர் ,வேலுச்சாமி, கார்த்திக், பிரபாகரன், பழனி ,சுரேஷ், சி தினகரன் ,கவிப்பிரியா, மோகனப்பிரியா, உமாமகேஸ்வரி, பரந்தாமன், உதயநிதி ,டி எஸ் திவ்ய கலா, வா அசோக் குமார் ,பார்த்திபன் என் சுரேஷ், சந்துரு மற்றும் பலர் உள்ளனர்.